தொழிற்சாலை அவருடைய பகுதியிலே அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையில் தெளிவாக "தென் மாவட்டங்களுக்கென்று புதிய தொகுப்புத் தொழிற்சாலைகள் அறிவிக்கப்படும்" என்று சொல்லியிருக்கின்றார்கள். நிச்சயமாக அந்தப் பகுதி மக்களுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு தொழிற்சாலைகளை அமைக்க இருக்கின்றார்கள் என்று சொல்லி, மூலக் கேள்விக்கும், இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லாத காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களை தனிக் கேள்வியாக போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 219, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

219—

சார் பதிவாளர் அலுவலகம்

***930—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஒன்றியத்தில் சார் பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஒன்றியத்தில் சார் பதிவாளர் அலுவலகம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

2013 ஏப்ரல் 15]

திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாஉள முன்நிற் பவை".

நூல் அறிவுடன் இயற்கையான மதிநுட்பம் உள்ளவர்க்கு முன்னால், எந்த சூழ்ச்சியும் எதிர்நிற்க முடியாது என்ற தெய்வப் புலவனின் பொய்யா மொழிக்கிணங்க தமிழர்களின் நலனே தன் நலன், தமிழர்களின் இலக்கே தன் இலக்கு என்று அல்லும், பகலும் அயராது பாடுபட்டு வரும் எங்கள் பேரரசியாம் (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றாவது முறையாக அரியணையில் அமர்ந்து அரசாட்சி புரியும் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன்.

பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஒன்றியத்தில் 16 ஊராட்சிகள் உள்ளன. அவற்றில் 8 ஊராட்சிகளிலுள்ள மக்கள் பல்லடம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கும், மீதமுள்ள 8 ஊராட்சிகளிலுள்ள மக்கள் திருப்பூர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கும் செல்ல வேண்டியுள்ளது. கடைசியாக இருக்கும் ஊராட்சிகளிலிருந்து திருப்பூர் 18 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளது. திருப்பூரிலிருந்து திருப்பூர் வடக்குத் தொகுதியில் அமைந்துள்ள சார் பதிவாளர் அலுவலகமானது 6 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளது. மொத்தம் 24 கிலோ மீட்டர் தூரம் செல்லும் சூழ்நிலை உள்ளது. இரண்டு சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளைத் தாண்டி செல்லவேண்டிய சூழ்நிலையுள்ளது. எனவே, பொங்கலூரில் சார் பதிவாளர் அலுவலகம் அமைக்க மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டுசென்று, பரிசீலனை செய்யுமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது என்று தெரிவித்துள்ளார். இருப்பினும், நம்முடைய தமிழகத்தில்தான் மிக அதிகப்படியான அதாவது 578 சார் பதிவாளர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. மற்ற மாநிலங்களிளோடு ஒப்பிடுகையில்,

மகாராஷ்டிராவில் 466, ஆந்திராவில் 432, உத்தரப் பிரதேசத்தில் 355, கேரளாவில் 310, கர்நாடகாவில் 242, மத்தியப் பிரதேசத்தில் 226, குஜராத்தில் 249, தமிழகத்தில்தான் 578 சார் பதிவாளர் அலுவலகங்கள் இயங்கிவருகின்றன.

அதேபோல, ஒரு சார் பதிவாளர் அலுவலகம் அமைக்க வேண்டுமெனில், தொடர் செலவினமாக 15 இலட்சம் ரூபாயும், தொடராச் செலவினமாக 13 இலட்சம் ரூபாயும் அரசு செலவிட வேண்டியுள்ளது. பொதுவாக, பொதுமக்கள் சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு, தம் வாழ்நாளில் ஓரிருமுறை மட்டுமே செல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மேலும், சார் பதிவாளர் அலுவலகங்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகள், வங்கிகள், போக்குவரத்து வசதிகள் உள்ள இடங்களிலேயே அலுவலகங்களை அமைக்க வேண்டியிருப்பதாலும், தற்போது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், முக்கிய இடங்களில் சார் பதிவாளர் அலுவலகங்கள் ஏற்கெனவே அமைக்கப்பட்டிருப்பதாலும், புதியதாக சார் பதிவாளர் அலுவலகம் அமைக்கவேண்டிய அவசியம் எழவில்லை. எனவே, புதியதாக சார் பதிவாளர் அலுவலகம் அமைக்க வேண்டி கொடுத்த கோரிக்கைகளை, கைவிடலாம் எனத் துறை கருதுகிறது. ஏனென்றால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, பதிவுத் துறைக்கு வேண்டிய அனைத்துக் கட்டமைப்பு வசதிகளையும் உருவாக்கித் தரவேண்டுமென்கிற எண்ணத்தில், இன்றைக்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளிலே 129 சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்காக 2011–2012–ல் 26 கோடி ரூபாயும், 2012–2013–ல் 48.93 கோடி ரூபாயும் அம்மா அவர்களின் அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–20

அதேபோல, முழுமையாக கணினிமயமாக்குவதற்காக 117.34 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பதிவுத் துறைக்காக ஒதுக்கீடு செய்திருக்கிறது. 1.22 கோடி ரூபாயில் வாகனங்கள், ஐபி. கேமரா அதாவது இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகளுக்காக 3.5 கோடி ரூபாய், 150 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கும் 4.5 கோடி ரூபாயில் மின்னாக்கிக் கருவிகள் இவையெல்லாம் வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய

2013 ஏப்ரல் 15]

அரசு இந்த இரண்டு ஆண்டுக்காலத்தில் நடவடிக்கை எடுத்து வருகிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, வாய்ப்பு இருப்பின், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக பரிசீலனை செய்யும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், பல்லடம் தொகுதி மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ் அவர்கள்.

திரு. என்.எஸ்.என். நடராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி, தமிழக முதல்வர் அம்மா அவர்களை வணங்கி, திருப்பூர் மாவட்டம், காங்கேயம் மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்த அரசு கலைக் கல்லூரியைக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எங்கள் குடும்பத்தின் சார்பிலும், எனது தொகுதி மக்களின் சார்பிலும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, திருப்பூர் மாவட்டம், காங்கேயம் சார் பதிவாளர் அலுவலகம்மூலம் அரசுக்கு அதிக வருவாய் கிடைக்கின்றது. அந்த அலுவலகக் கட்டடம் 110 ஆண்டுகள் பழமையான கட்டடம் என்ற காரணத்தால், அதற்குப் பதிலாக ஒரு புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யுமா என தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதைப்போல, இந்த இரண்டு ஆண்டுகளில் 129 சார் பதிவாளர் அலுவலகங்கள் கட்டுவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் திட்டங்களை வகுத்து பணிகள்

நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 2011–2012–ல் 52 அலுவலகங்களும், 2012–2013–ல் 48 அலுவலகங்களும், 17 ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகங்களில் 29 சார் பதிவாளர் அலுவலகங்களும் கட்டுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையான காங்கேயம் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 220, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

220—

பேருந்து வசதி

***22925—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமேஸ்வரத்திலிருந்து குருவாயூருக்கு நேரடியாகப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, இரண்டு மாநில போக்குவரத்துத் கழகங்களுக்கிடையே ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப இராமேஸ்வரத்திலிருந்து குருவாயூருக்கு நேரடிப் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம், இந்தியா முழுவதிலிருந்து*